**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 23.06.2025**
**OS. No. 45/2023**
**வழக்கு சாட்சி PW1.தங்கவேல், த/பெ.பழனியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி :**

1. 14.06.2021ம் தேதியில் என் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. 09.07.1999ம் தேதியில் ராஜமுத்து பெயரிலுள்ள பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.
3. 09.07.1999ம் தேதியில் சரஸ்வதி பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.
4. 29.12.2022ம் தேதியில் என் பெயரிலுள்ள பட்டா எண்.3060 கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.
5. 23.01.2022ம் தேதியில் நான் என் பெயரில் செலுத்திய கந்தாய ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.
6. 23.01.2022ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான அடங்கல் உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.
7. 31.02.2023ம் தேதியில் கோட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணை அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.
8. 02.03.2023ம் தேதியில் வட்டாட்சியர் வழங்கிய குறிப்பாணை அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.
9. 29.12.2022ம் தேதியில் நான் உதவி ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பிய மனு கை நகல் மற்றும் தபால் ரசீது அசல் ஆகியவை **வா.சா.ஆ.9** ஆகும்.
10. 23.12.2022ம் தேதியில் நான் நிலத்தை சர்வே செய்வதற்காக செலுத்திய பணத்திற்குண்டான சலான் கை நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 09.07.2025ம் தேதி ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.